மேலும் ஒரு 200 பள்ளிகளையாவது தரம் உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் கோரிக்கை வைத்து இருக்கிறோம். அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ், வரக்கூடிய ஆண்டுகளிலே அதிகமான நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அரசு அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் radius-*க்குள்ளாக ஒரு உயர்நிலைப் பள்ளி வரவேண்டும் என்ற ஒரு கொள்கையை அரசு எடுத்திருக்கிறது. அப்படி உருவாக்கப்படுகிறபோது அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்த இரண்டு பள்ளிகளையும் அந்தப் பட்டியலிலே இணைத்துக்கொள்வதற்கு அரசு நிச்சயமாக முன்னுரிமை அளிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

வணிக வளாகம்

***35107—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் தாட்கோ மூலம் கட்டப்பட்ட வணிக வளாகத்தினைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ): மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் தாட்கோமூலம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கட்டப்பட்ட 90 கடைகளில் பல்லடம் மற்றும் அவினாசியில் கட்டப்பட்ட 20 கடைகள், திருப்பூர் மாவட்டத்தின் எல்லைக்குட்பட்டுள்ளன. மீதமுள்ள 70 கடைகளில் 20 கடைகள் சூலூர் பேரூராட்சிக்கு விற்கப்பட்டுள்ளன. 10 கடைகள் வாடகைக்கு விடப்பட்டு வாடகை

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 19]

வசூலிக்கப்பட்டு வருகின்றது. மேலும் 40 கடைகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. எனவே, 40 கடைகள் காலியாக உள்ள நிலையில், வணிக வளாகத்தினைச் சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா கோவை மாநகரில் கட்டப்பட்டுள்ள தாட்கோ வணிக வளாகம் சீரமைக்கப்படுமா என்பது ஒன்று. சீரமைத்து கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேலாகிறது. இந்த வணிக வளாகத்தினைப் பயனாளிகளைத் தேர்வு செய்து, அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு எனது குன்னூர் தொகுதியில் கோத்தகிரி மற்றும் குன்னூர் ஆகிய இரு தாலுகாக்களிலும் தாட்கோ வணிக வளாகம் வேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு தங்கள்வாயிலாகக் கொண்டு வந்து நிறைவேற்றுவாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 70 கடைகள் கட்டப்பட்டன. அவற்றில் 20 கடைகள் சூலூர் பேரூராட்சிக்கு விற்கப்பட்டுள்ளன. 10 கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. மீதம் 40 கடைகள் காலியாக உள்ளன. அதுமட்டுமல்லாமல் 1988-இல் தாட்கோ நிறுவனத்தின்மூலமாக 7 கடைகள் வாடகைக்கு விடப்பட்டு, அவற்றுக்கும் பயனாளிகள் இதுவரையில் வாடகையைச் சரியாகச் செலுத்தவில்லை. பொதுப் பணித் துறை நிர்ணயித்த வாடகைத் தொகைக்கான ஒப்பந்தந்ததைக்கூட நீட்டிப்பு செய்ததால் இக்கடைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில் உள்ளன. இவற்றை மீண்டும் மறு ஏலம் விடுவதற்குத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 47 கடைகள் காலியாக உள்ள நிலையில் இந்த வணிக வளாகத்தினைச் சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2010 ஏப்ரல் 19

மேலும் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குன்னூர் தொகுதியில் கடை வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இதுவரை நம்முடைய துறையின்மூலமாக மட்டும் 810 கடைகள் ரூபாய் 405 இலட்சம் மதிப்பில் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 713 கடைகள் கட்டி முடிக்கப்பட்டு 97 கடைகளுக்கு இடம் கிடைக்காததால் கட்டப்படவில்லை. மீதமுள்ள 713 கடைகளில் 273 கடைகள் வாடகைக்கு விடமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. மேலும் வாடகைக்கு விடப்பட்ட 391 கடைகளுக்குக்கூட இதுவரைக்கும் ஒரு கோடியே 65 இலட்சத்து 26 ஆயிரத்து 170 ரூபாய் வாடகை பாக்கி நிலுவையில் உள்ள நிலையில் புதிதாகக் கடைகள் கட்டப்படுவதற்கான வாய்ப்புகள் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போன்று, கோவை மாவட்டத்தில் கட்டப்பட்ட 7 கடைகளில் ஒரு கடையைச் சார்ந்த உரிமையாளர் மட்டும் வாடகை தரவில்லையென்று கடந்த கால ஆட்சியில் 7 கடைகளையும் சேர்த்து மூடிவிட்டார்கள். அதன் பிறகு பராமரிப்பின்றி அந்தக் கட்டடம் சேதமடைந்தது. கேள்விக்குப் பிறகு, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து அது சீர் செய்யப்பட்டிருக்கிறது. தற்போது அந்த 7 கடைகளுக்கும் பயனாளிகளைத் தேர்வு செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில், மாவட்டங்களில் கட்டிய வணிக வளாகங்கள் செயல்படவில்லை என்பது ஒன்று. ஆனால் நீலகிரி மாவட்டத்திலே சுமார் 30, 39 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதியில் வணிக வளாகம் கேட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் அனுமதியோடு மறுபசீலனை செய்து இந்த மலை மாவட்ட மக்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி அவர்கள் வணிக வளாகத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் கருத்தம்பட்டி, கனியூர், ஆனைமலை ஆகிய இடங்களில் எல்லாம் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. வடவள்ளி பகுதி-2, வடவள்ளி பகுதி-1 ஆகிய பகுதிகளில் மட்டும் தலா 5 கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அதாவது ஒன்று 950 ரூபாய்க்கும் வாடகைக்கு விடப்பட்டு, இன்னொரு கடை அதாவது வடவள்ளி பகுதி-1-ல் உள்ள கடை 850 ரூபாய்க்கும் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு இடங்களில் உள்ள 10 கடைகளில் மட்டும் வாடகை நிலுவைத் தொகை என்பது 8,13,473 ரூபாய் ஆகும். வடவள்ளி பகுதி-1-ல் மட்டும் 2,22,409 ரூபாய் வாடகைத் தொகை நிலுவையில் உள்ளது. மேலும், வடவள்ளி பகுதி 2-ல் மட்டும் ரூபாய் 5 இலட்சத்து 91 ஆயிரத்து 64 ரூபாய் வாடகை நிலுவையிலுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் புதிதாகக் கடைகள் கட்டுவதற்கான வாய்ப்புகள் எழவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

பால் குளிரூட்டும் நிலையம்

***104163—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ. ஜேடர்பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?